# சம்மாந்துறை பிரதேச சபையின் 09 வது பொது கூட்டறிக்கை
# 2018.11.13

சம்மாந்துறை பிரதேச சபையின் 09 ஆவது அமர்வு 2018.11.13 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 03. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 05. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 09. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 09 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இன்றய சபை அமர்விற்கு கௌரவ உப தவிசாளர் ஜெயச்சந்திரன், கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் இவர்கள் மூவரும் பங்குபற்ற முடியாத நிலையை அறிவித்து விடுமுறை கேட்டுள்ளனர். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தொகைகளின் பெறுமானம் மில்லியனுக்குப் பதிலாக இலட்சம் போடப்பட்டுள்ளது அதனை மாற்ற வேண்டும்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த வருடம் கடைசி 02 மாத காலத்திலாவது அவசரமாக வேலைகளை செய்து முடிப்போம் என்ற எதிர்பார்ப்புடன் இருந்து ஆவலோடு நாம் முயற்சிகள் எடுத்தோம். அதில் சில வேலைகள் சாத்தியமானது. நான் பிரதேச செயலகத்தில் சுற்றுநிருபம் ஒன்றை வாசித்த போது கட்டுமான நிதி ஒதுக்கிடாத வேலைகளைச் செய்ய வேண்டாம் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. பணம் ஒதுக்கப்பட்டதாக எழுத்து மூலம் வர வேண்டும். நகர திட்டமிடல் ஒப்பந்த வேலைகள் ஆரம்பிக்க வேண்டுமா? இல்லையா? என்பதை நாம் தெளிவு படுத்த வேண்டும். இதற்குப்பின்னர் வருகின்ற பிரச்சினைகள் பற்றி சபை அமர்விற்குப் பின்னர் இருந்து அதற்குரியவர்களிடம் பேசி தெளிவு படுத்திக் கொள்ளலாம். டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் நிறைவு பெறாத சில வேலைகளை செய்து முடிக்க வேண்டும்.

இன்று ஒரு தீர்ப்பு வந்தாலும் 02, 03 மாதங்களுக்கு ஒரு குழப்ப நிலை இருந்தாலும் நமது சபை ஒழுங்காக நடக்க வேண்டும். என்பது அனைவரது நோக்கமாக இருக்க வேண்டும். சபையில் ஊருக்காக அரசியல் பேதங்களுக்கும் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பால் செயற்படுவோம் என்று நாம் நமது மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம். எனவே, அரசியல் தொடர்பான விடயங்கள் சபைக்குள் வரக்கூடாது. அது சபைக்கு அப்பால் இருக்க வேண்டும்.

**Compost Yard** ஒழுங்கான முறையில் இயங்க வில்லை எனவும் அதற்கு வழங்கப்பட்ட 06 மில்லியன் பணத்தையும் மீள செலுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. பின்னர் ஓர் அழைப்பு விடுத்தார்கள் அதற்கு நான் சென்று தெளிவான முறையில் கூறியுள்ளேன். இதனை ஆரம்பித்து வைத்தது சென்ற சபையில். ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் இல்லை. நிர்வாக குழப்பங்களால் Composting ஒழுங்காக செயற்பட வில்லை. ஆனால் வளங்கள் ஒழுங்காக உபயோகிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இந்த சபைக்கு கிடைக்க வேண்டிய 06 மில்லியன் ரூபா பணம் வரவேண்டி உள்ளது. அதற்குரிய முயற்சி எடுத்தும் இடையில் விடுபட்டுள்ளது. இவ்வாறு பேசி ஓரளவு முடியுமான பணத்தை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது Compost வேலைகள் இடம்பெறுகின்றது. அத்தோடு அங்கு யானையின் அட்டகாசமும் இடம் பெறுகின்றது. 03 தடவை சுவரை உடைத்துள்ளது.

உக்கக்கூடிய கழிவுகள், உக்காத கழிவுகள் என்று தரம்பிரித்தெடுக்கும் செயற்பாடு சீராக நடைபெற்றால் ஏறத்தாள 50 வீதத்திற்கு மேற்பட்ட குப்பைகளை நாம் வெளியில் அனுப்ப வேண்டி வராது. அவைகள் Compost Yard க்குப் போகலாம். தொடர்ந்து காரைதீவுக்குச் சென்றால் பாரிய செலவாகும். மழை காலங்களில் 05 டொன், ஈரம் காரணமாக 5½ டொன்னாக மாறும். இதில் மக்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும். அவர்களது பணத்தின் பெருந்தொகை இதற்குப் செலகின்றது. நாம் பிரித்துக் கொடுப்பதை ஒழுங்காக செய்ய வேண்டும் என்று மக்களுக்கு விளங்க வேண்டும். அந்த உணர்வு மக்களிடம் இல்லை. அதனை துண்டுப்பிரசுரம் மூலம் மக்களுக்கு தெளிவு படுத்துவது கடினமாக உள்ளது. இதற்கு கொளரவ உறுப்பினர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும். முக்கியமான விடயம் என்னவென்றால் அந்தக் களத்தில் இருந்து

அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால், நமக்கு வழிகாட்ட ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்வு வரும். எம்மை தெரிவு செய்த மக்களுக்காக நாம் செய்ய வேண்டும். நமது பிரதேசத்தை நகர சபையாக மாற்ற வேண்டும் என்றால் அதற்குரிய இலட்சனங்களை உருவாக்க வேண்டும். ஒரு வட்டாரம் செய்து முடித்துவிட்டோம். மற்றய வட்டாரங்கள் செய்வதற்கு அங்கத்தவர்களின் உதவி தேவை.

**Road Inventory** தொடர்பாக சிலர் முடித்துத் தந்துள்ளனர். முடிக்காதவர்கள் அதனை 30 ஆம் திகதிக்குள் முடித்துத் தாருங்கள். உங்களால் முடியாவிட்டால் முடியாது என்றாவது கூறுங்கள்.

வர்தக அமைச்சினால் ஒரு Toilet 55,000 ரூபா வீதம் 100 Toilet க்கு நிதி கிடைத்துள்ளது. அது கட்சிக்கென்று வந்தவைதான், ஆனால் கட்சிக்கு அப்பால் கௌரவ உறுப்பினர்கள் நீங்கள் உங்கள் வட்டார ஏழை மக்களுக்கு கண்டிப்பாக உதவ வேண்டும் என்றிருந்தால் அவர்களது விலாசம், தேசிய அடையாள அட்டை அடங்கிய முழு விபரங்களையும் தயவு செய்து இன்று அல்லது நாளை தாருங்கள். நான் அதனை தொகுத்து பிரதேச செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். இது ஏழை மக்களுக்கே போய் சேர வேண்டும். இதனை கொண்டுவந்தவர்கள் இருந்தாலும் அனைத்து உறுப்பினர்களுக்கும் அதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது என்ற திருப்தி இருந்தால் நல்லது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எந்தக் கட்சி கொண்டு வந்தாலும் அது அரசாங்கத்தின் பணம். பொது மக்களுக்குரிய பணம். நாங்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் கொண்டு வந்த காசை தனியாக அந்தக்கட்சி மக்கள் வாழ்கின்ற பகுதிக்கு மட்டும் வீதி போடவில்லை. பொதுவாக வீதி போட்டுள்ளோம். எல்லாக் கட்சி மக்களும் பயனிக்கும்வாறே செய்துள்ளோம் அவ்வாறே எந்தக்கட்சி கொண்டுவந்தாலும் எல்லா மக்களும் பிரயோசனப்படக் கூடியதாகவே அமைய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் கூறியதை மீண்டும் கூறுகின்றீர்கள். நான் கூறியதற்குக் காரணம் ஒவ்வொருவரும் உரிமை கோருவதனால்தான். அது பிரச்சினை இல்லை. உங்களுக்கு இருந்தல் தாருங்கள்.

தற்போது மாரிகாலம் என்பதனால் பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி வருகின்றது. அனுமதியில்லாமல் எல்லா விடயங்களையும் செய்வார்கள் ஏதாவது பிரச்சினை வந்தால் பிரதேச சபைக்கு ஓடி வருவார்கள். அதாவது மழைநீர் தேங்கி நிற்பதாகவும், அந் நீர் வழிந்தோடுவதற்கு வழி இல்லை என்றும் முறைப்பாடு கொண்டு வருவார்கள். இவ்வாறு முறைப்பாடு வரும்போது ஏன் இந்தப்பிரச்சினை உருவாகின்றது என்பதனை கௌரவ உறுப்பினர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சட்ட விரோதமான விடயங்களை நாம் சட்டபூர்வமாக்குவது சிக்கலான விடயம். தனிப்பட்ட மக்களின் வளவுக்குள் அனுமதி இல்லாமல் தடைகளை உருவாக்கி, அதன் பின் அந்தத் தடைகளால் வரும் விளைவுகளுக்கு பொதுப்பனத்தால் தனியார் சொத்துக்களுக்குள் நாம் வடிகான் கட்டக்கூடிய அதிகாரம் நமக்கு இல்லை. ஏனென்றால் அது தனியார் காணி.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சின்னப்பள்ளி வட்டாரத்தில் வசிக்கும் பொது மக்களின் புதிய வடிகான் அமைத்துத் தரக் கோரல் என்ற தலைப்பில் ஒரு முறைப்பாட்டுக்கடிதத்தில், தாங்கள் அமீர் அலி வீதியில் உள்ள காணியில் பல வருடங்களாக குடியிருந்து வருவதாகவும் அக்கானியில் மழைகாலங்களில் நீர் வழிந்தோடாமல் வீடுகள் முற்றாக தாழ்ந்து விடுவதாகவும் அதனை பிரதேச சபை செயலாளர் நேரில் வந்து பார்வையிட்ட போது அவர்கள் பின் வளவு வழியாக சிறிய வடிகான் ஒன்றை அமைக்க இருசாராரும் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே, அந்த வடிகானை அமைக்க அவர்களிடம் பணம் இல்லாததன் காரணத்தினால் உங்களது சபை நிதி கொண்டு அதனை அமைத்துத்தருமாறும் கேட்டுள்ளனர். அக்கடிதத்தில் 09 பொது மக்கள் கையெப்பம்

இட்டுள்ளனர். கடிதத்தின் பின்பக்கம் உமர்லெப்பை சபியா என்பவர் பிரதே சபை செயலாளருக்கு கடிதம் எழுதி அதில் பிரதேச சபை செயலாளர் இடத்தைப் பார்வையிட்டு கான் கட்டுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளார். எனவே இவ்விடயத்திற்கு இன்று ஒரு தீர்வெடுப்பது சாலச்சிறந்தது என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதற்கான முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. இதன் சரித்திரத்தை நான் கூற வேண்டும். இவர்களின் காணிக்கு அருகில் அமீர்அலி குறுக்கு வீதி, மறுபக்கம் பத்தஹ் பள்ளி வீதியும் மறுபக்கம் பிரதான வீதி இவை இரண்டுக்கும் இடையில் சிறிய பள்ளத்தாக்கு இரண்டு தட்டு வளவுகள் உள்ளது. ஏற்கனவே போன சபையில் ஒரு வளவுக்கு பிரச்சினை வந்துள்ளது. வடிகான் இருப்பது பள்ளிவாசல் அருகில். பள்ளி நிர்வாகிகளுடன் பேசி அவ் வளவு நீர் அந்த வடிகானுக்குள் செல்லக்கூடியவாறு செய்யப்பட்டது. அந்த காலகட்டத்தில் இவர்கள் யாருக்கும் பிரச்சினை இருக்கவில்லை. காரணம் வளவுக்குள் வீடுகள் கட்டவில்லை. ஏதோ ஒரு வழியில் நீர் சென்று கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் அனைவரும் வீடு கட்டியுள்ளார்கள் ஒரு வீட்டுக்கும், மதில்களுக்கும் அனுமதி எடுக்கவில்லை.

சட்டவிரோதமான கட்டடம் கட்டினாலும், புறம் வளவு ஒன்று இருந்ததனால், ஒரு பிரச்சினையும் வரவில்லை. அந்த வளவுக்குள்ளால்தான் அனைவரதும் நீரும் சென்றது. அந்தப் புறம் வளவுக்குச் சொந்தமானவர் அவரும் அனுமதி இல்லாமல் தனது மகளுக்கு வீடு கட்ட ஆரம்பிக்கும் போது தான் இந்த முறைப்பாடு வந்தது. இவைகள் அனைத்தும் பேமிட் காணிகள். அவைகளுக்கு எல்லைகள் வழங்கும் போது பிரதேச செயலாளரும் இருக்க வேண்டும் என்று நாங்கள், பிரதேச செயலாளர் அனைவரும் சென்று பார்வையிட்டு கடைசியில் அந்த வளவின் உரிமையாளர் அவர்களது தன்னீர் ஓடுவதற்கு கான் கட்டுவதற்கு வழி தருகின்றேன் என்றும், அதற்குள் நீர் விடுபவர்கள் கான் கட்டுங்கள் என்றும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இது தனியார் காணி 09 பேருக்கும் சொந்தமான காணி. அவர்களுக்கு சொந்தமான காணியில் அவர்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு நாம் பொதுக்காசை செலவு செய்தால் அனைவரும் இதேபோல் பிரச்சினையைக் கொண்டுவருவார்கள்.

அவர்கள் அனுமதி எடுத்திருந்தால் நிச்சயமாக நீர் வழிந்தோடுவதற்குரிய வழி விட்டுத்தான் அனுமதி வழங்கியிருப்போம். தனியார் காணிக்குள் நாம் செய்து கொடுக்க முடியாது. இவ்விடயம் கணக்காய்வுக்கு வரும். நாம் அவர்களுக்கு பதில் கூற வேண்டும். இதனை சபையால் செய்ய வேண்டும். மிக முக்கியமானது என்றால், அந்தப்பகுதி காணி முழுவதும் சபைக்கு எழுதப்பட வேண்டும். அப்போது சபை சொத்தாக மாறும் பின்னர் எந்தப் பிரச்சினையும் வராது. சென்ற சபைக்காலத்தி 04 வருடங்களில் எந்தவிதமான கணப்பாய்வும் வரவில்லை. காரணம் அதற்கு உகந்ததாக முடிவுகள் எடுக்கப்பட்டமையாகும். தனியார் வளவுக்குள் 09 குடும்பத்திற்காக நமது சபைப்பணத்தால் வடிகான் கட்டுவதென்பது என்னைப்பொறுத்தமட்டில் சட்டத்தில் ஒரு பிரச்சினை.

இவ்வாறான விடயங்களில் கௌரவ உறுப்பினர்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். நாம்தான் இதற்கு பொறுப்புதாரி. இதில் அரசியல் இலாபமோ, தனிப்பட்ட இலாபத்திற்கு அப்பால் நிர்வாகிகள் ஒரு பிழையான விடயத்திற்கு ஒப்பம் இடமாட்டார்கள். அதற்கு நான் அவர்களை ஒப்பமிடுமாறு திணிக்கவும் முடியாது. சபைத் தீர்மானம் இருந்தாலும் அதில் சட்ட விரோதமான விடயங்கள் இருந்தால் நாம் அதனை செயற்படுத்த முடியாது. நான் பள்ளி மஹல்லா நிறுவாகத்தினரிடம் கூறினேன். நீங்கள் வழி கொடுத்தால் எந்தப்பிரச்சினையும் இல்லை. என்று கூறியதும் அவர்களால் முடியாது என்றதும் பிரதேச செயலாளரிடம் கொடுத்துவிட்டேன். தனது மகளுக்கு வீடு கட்ட வேண்டும் என்பதனால் கான் கட்ட அனுமதி வழங்கிவிட்டார். அவர்களது வளவுக்குள் பொதுப் பணத்தை போட்டுக் கட்டுவது நியாயமில்லாத கோரிக்கையாகும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது 09 வது சபை அமர்வு. ஒவ்வொரு அமர்விலும் ஒவ்வொரு பிரேரனையையும் கொண்டுவந்து செய்து கொண்டிருக்கின்றோம். 20 வட்டாரங்கள் இருந்தும் எங்களது 04 ம் வட்டாரத்தில் 02 உறுப்பினர்கள் இருக்கின்றனர். பிரதேச சபையால் 09 மாத

அமர்வுகலிலும் எங்களது வட்டாரத்தில் என்ன செலவு செய்துள்ளீர்கள் என்பதை நான் அறிய வேண்டும். ஏனென்றால் நான் நினைக்கின்றேன் வட்டாரங்கள் திட்டமிட்டு விரும்பியவர்கள் உங்களிடம் பேசி அந்த வேலைகளை செய்துகொண்டு போவதாக விளங்குகின்றது. எங்களது 04 ம் வட்டாரமும் உங்கள் சபைக்குள்தான் இருக்கின்றது. எனவே, ஏன் எங்களது வட்டாரத்தில் எதுவித அபிவிருத்தி வேலைகளும் இடம்பெற வில்லை என்பதனை நீங்கள் தெளிவு படுத்த வேண்டும். அல்லது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சபைப்பனத்தில் ஒரு தொகையை ஒதுக்கி அந்த வேலைகளைச் செய்வது சிறந்ததாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சபையில் எந்த அபிவிருத்தி வேலைகளுக்கென்றும் பெரிய பணத்தொகைகள் இல்லை. சபையால் என்று செய்வதெல்லாம் முறைப்பாடுகள் வந்தவுடன், அந்த முறைப்பாடுகளுக்கு தீர்வு கான்பதற்காக செய்யும் வேலைகள். மற்ற அனைத்து வேலைகளுக்கும் கௌரவ உறுப்பினர் அவர்களது முயற்சியில் கொண்டு வந்து செய்வது. சபையினால் எந்த வீதியும் போடவில்லை. கான்கள் திருத்தம் செய்திருக்கின்றோம். தற்போது வருட இறுதியில் சில Capital Impress இல் இருப்பதில் வீதி போடப்பட்டு இடையில் விடுபட்ட 10M - 20M குள் உள்ள வீதிகளை செய்து முடிப்பதுதான் நோக்கமே தவிர எந்த பாரபட்சமும் காட்டப்பட வில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என்னெவென்றால், அவரது நான்காம் வட்டாரத்திற்கு நான் 20 இலட்சம் ரூபா செலவில் வீதி போட்டுள்ளேன். அவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அமைப்பாளராக இருந்து கொண்டும் அவரால் ஒரு வீதி கொண்டு வர முடிந்ததா? அவரும் பங்காளிக் கட்சி ஒரு தாய் கட்சி அவரால் பணம் கொண்டுவந்து வீதி போட முடிந்ததா? அவ்வாறு இருக்கும் போது அவரது வட்டாரத்தில் எந்த அபிவிருத்தியும் செய்ய வில்லை என்பது நியாயமற்ற கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சில இடங்களில் உங்களது வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் வெள்ள காலங்களில் 01 அல்லது 02 இடத்தில்தான் பிரச்சினை வரும். மற்ற இடங்களில் ஓரளவு பிரச்சினைதான். காரணம் நீங்கள் பள்ளத்தாக்கிற்குள் இல்லை. 02, 03 இடங்கள் அந்த வட்டாரத்தில் இருக்கின்றது. நான் எங்கு இருந்தாலும் ஊரில் மழை பெய்தால் வாகனத்தை எடுத்துக் கொண்டு ஒரு தடைவ அனைத்து இடங்களையும் பார்த்துக் கொண்டு வருமாறு உடனே செயலாளரிடம் கூறுவேன்.

தற்போது தற்காலிக அடிப்படையில் 58 ஊழியர்கள் உள்ளனர் அவர்களுக்கு மீண்டும் 06 மாதகால நீடிப்பு வழங்குவதற்கும், அதே நேரம் நமது சபையில் 03 வருமான பரிசோதகர் ஆளணி உள்ளது. ஆனால் ஒரு வருமானப் பரிசோதகர்தான் உள்ளார். நாம் ஒரு முடிவெடுத்து ஓய்வு பெற்ற வருமானப் பரிசோதகர் ஜனாப். MA.றசூல் என்பவரை எடுத்ததனால் இன்று பாரிய வேலைகள் நிறைவு பெறுகின்ற தருவாயில் உள்ளது. அனைத்து வட்டாரங்களிலும் 43 பிரிவுகளில் ஆதனவரிக்குரிய தகவல்கள் எல்லாம் சேகரித்து முடிவடைந்துள்ளது. பின்னர் அவைகளை புத்தக வடிவில் அமைத்து ஒழுங்படுத்தி செயற்பட வேண்டும். அதனை ஒரு வருமானப் பரிசோதகரால் செய்ய முடியாது. அதனால் ஓய்வு பெற்ற வருமானப் பரிசோதகர் றசூல் அவர்களுக்கும் இன்னும் 06 மாத காலம் நீடிப்பு வழங்கி இந்த வேலைத் திட்டத்தினை செய்ய வேண்டும்.

நாம் நகர சபையாக மாற வேண்டும். என்றால் அனைத்து இடங்களும் ஆதனவரி அறவிடக்கூடிய இடமாக மாற வேண்டும். இவ்வாறான விடயங்கள் அதிகமான சபைகளில் அரசியலுக்கு நல்லதில்லை என்று செய்வதில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அதனை தெளிவாகக் கூறுகின்றேன். நாம் நமது ஊரை சீர்படுத்த வேண்டும் என்றால் அரசியலுக்கு அப்பால் நிர்வாக முடிவுகள் எடுக்க வேண்டும்.

**தீர்மானம் 02**
தற்போது தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளிகள், சாரதிகள், வேலைத் தொழிலாளிகள் ஆகியோரின் 06 மாத கால சேவை அனுமதி முடிவடைந்துள்ளதால் அவர்களுக்கு 06 மாத கால நீடிப்பு வழங்குவதற்கும், ஓய்வு பெற்றுச் சென்ற வருமான வரி உத்தியோகத்தர் Mr.MA.றசூல் என்பவரை புதிதாக ஆதனவரி அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ள மீண்டும் 06 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு நீடிப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறை பிரதேச செயலகமும், பிரதேச சபையும் இணைந்து நடாத்தும் இன ஐக்கியத்தைப்பற்றிய கவியரங்கு நிகழ்வு ஒன்று நடாத்த வேண்டும்.

**தீர்மானம் 03**
சம்மாந்துறை பிரதேச செயலகமும், பிரதேச சபையும் இணைந்து கவியரங்கு நிகழ்வினை நடாத்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களும் இது தொடர்பாக கடிதம் மூலம் அறிவித்திருந்தார் அவருக்கும் சில வேளை தெரியாமல் இருந்திருக்கலாம். இந்த சபையைப் பாரமெடுத்த காலத்தில் சிற்றூழியர்களுக்குத்தான் முதல் உரிமை. அவர்கள்தான் இந்த சபையின் முதுகெலும்பு. அவர்கள் அவர்களது சேவைகளை எவ்வாறு செய்கின்றார்கள் என்பதில் தான் பாராட்டும் வரும் ஏச்சும் வரும். அவர்களை கௌரவிக்க வேண்டியது நமது கடமை. ஒவ்வொரு டிசம்பர் மாதமும் ஒன்று கூடல் செய்து அவர்களது குடும்பங்களையும் அழைத்து ஒரு நாள் நிகழ்வு நடாத்துவதுண்டு. அதனை இந்த வருடமும் டிசம்பர் மாதம் நடாத்த வேண்டும். அதனை பயிற்சிப்பட்டறையாக நடாத்துவோம். காரணம் நிதிகளை பெற்றுக் கொள்வதற்காகவே; இதில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களது அபிப்பிராயம், திறமை சார்ந்த ஊழியர்களுக்கு பரிசளிப்பு செய்வதற்கு ஒரு குழு உருவாக்கி ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 04**
பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நடாத்தி அவர்களின் திறமைகளை வெளிக்காட்ட போட்டிகளையும் நடாத்தி பரிசளிப்புகளும் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் வரும்போது கல்லரிச்சல் சிறுவர் பூங்கா தொடர்பான ஒரு குற்றச்சாட்டு வந்தது. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கும் நன்றி கூற வேண்டும். 1.4 மில்லியன் நகர திட்டமிடல் அமைச்சில் இருந்து எடுத்தோம். ஆனால் 2.1 மில்லியனுக்கு மதிப்பீட்டறிக்கை வந்துள்ளது. அதனால் வேலையை முடிக்க வேண்டும் என்பதனால் மிகுதிப் பணத்தை சபை நிதி மூலம் வேலையை நிறைவு செய்தோம். நான் நகர திட்டமிடல் அமைச்சின் செயலாளரிடம் கூறினேன் நாங்கள் சபையினால் அந்தத் தொகையினை ஒதுக்கி வேலையை முடிப்போம் உங்களால்

முடிந்தால் அந்தப் பணத்தை மீளப் பெற எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அது சபையின் சொத்தாக மாறுவதனால் நமது பணத்தை செலவளிப்பதில் நியாயப்படுத்தலாம்.

**தீர்மானம் 05**

கல்லரிச்சல் சிறுவர் பூங்காவிற்குள் உள்ள உயர் அழுத்த மின் கம்பங்களை அகற்றுவதற்கான மீதி நிதி 705,550.65 ரூபாவினை சபை நிதிமூலம் மின்சார சபைக்கு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் ஒவ்வொரு வேலைகள் செய்யும் போது போய் பார்பது வழக்கம். அந்த வகையில் அரச உத்தியோகத்தர்கள் அதாவது தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை உண்டு. காபட் போடும் விடயம் பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அனுபவம் இல்லை. அதனை நாம் RDA அல்லது RDD தொழில்நுட்ப உத்தியோகத்தரோடுதான் அதனை செய்திருக்க வேண்டும். நகர திட்டமிடல் அமைச்சினால் தெருலாம்புக்கு ஒரு மதிப்பீட்டறிக்கை செய்து தரும்படி ஒரு கடிதம் அனுப்பி வைத்தார்கள். நான் கூறினேன் அதற்குரிய தகைமை என்னிடம் இல்லை. RDA அல்லது மின்சார சபைக்கு கொடுங்கள் என்று கூறிவிட்டேன்.

அதன் நுனுக்கங்கள் விளங்காததன் காரணமாக நாம் கவனத்தில் கொள்வதில்லை. வேலையும் சம்பூரணமாக முடிவதில்லை. அதில் திருப்தியும் இல்லை. இவற்றுக்காகத்தான் அனைத்துப் பாதைகளும் போடும் போது நான் சென்று பார்வையிடுவது. உதாரணமாக எங்களது காலத்தில் போடப்பட்ட வீதிகளைப் பார்கலாம். அவர்களுக்கு ஆர்வம் இருந்தால் நாம் போகத்தேவையில்லை. ஆனால் இது அவர்களின் தொழில். சிலவேளை அவ்விடத்திற்குப் போகமலும் மதிப்பீட்டறிக்கை தயாரிக்கலாம். பாதை போட வேண்டும் என்றால் அந்தப்பாதையில் உள்ள மக்களிடம் பிரச்சினைகளைக் கேட்டு அதாவது மழைகாலங்களில் என்னென்ன பிரச்சினைகள் வரும்? பாதையை பாவிப்பவர்கள் யார்? எவ்வாறான வாகனங்கள் அப்பாதையில் செல்கின்றது போன்ற தெளிவான தகவலை எடுத்ததன் பின்னர்தான் நாம் பாதை போடுவதற்கு முடிவெடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு காபட் சம்பந்தமான நுனுக்கம் தெரியாவிட்டாலும் வீதியில் வடிகான் எங்குள்ளது, நீர் எவ்விடத்தால் வடிந்து செல்ல வேண்டும் என்ற லெவல்கூட அவர்களுக்குத் தெரியாதா? அன்வர் இஸ்மாயில் மாவத்தையில் போடப்பட்டிருப்பது நடுவில் S29 வாய்கால் செல்கின்றது. வீதித் தன்னீர் வாய்காலுக்குள் போகாத பட்சத்தில் பள்ளத்தில் உள்ள வீடுகளுக்கு போகக்கூடிய அமைப்பில் வீதி சரிவாக போடப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் எனது வாகனத்தில் ஊரில் உள்ள வீதிகளை சுற்றிப்பார்பது எனது வழக்கம். அந்தவகையில் அவ்வீதியையும் பார்த்துள்ளேன். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் காபட் வீதியில் மாற்றக்கூடய விடயங்கள் அதிகமாக உள்ளது. வீதியின் சேபஸ் உறுதியாக இல்லாவிட்டால் சில பிரச்சினைகள் வரும். அல்லது கொந்தராத்துக் காரர்கள் இது சரிவரும் என்று நினைத்து வேலைகளைச் செய்வார்கள் அது பிழையாகின்றது. பின்னர் அப்பிழைகளை நிவர்த்தி செய்வது கஸ்டமான விடமாகின்றது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் வீதியில் நடைபெற்ற பிரச்சினைக்கு காரனம் நமது தொழில்நுட்ப உத்தியோகத்தர்தான். உண்மையாக காண்

போடவேண்டியது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களின் வீட்டையும் தாண்டிப் போட வேண்டும். வேலைகள் செய்து விட்டு பில் போட்டால் அது வெட்டப்பட்டு வருகின்றது. அவர்கள் கூறுகின்றார்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுமதி தர முடியாது என்றும் பொறியியலாளரால்தான் அது முடியும் என்று கூறுகின்றார்கள். சில விடயங்கள் இவ்வாறுதான் செய்யப்பட வேண்டும் என திணிக்கப்படுகின்றார்கள். நாம் அமைச்சர்களிடம் இருந்து கொண்டுவருகின்ற பணத்தை சில வேலைகளை நமது சபையினால் செய்ய முடியாவிட்டாலும் இன்னொரு நிறுவனத்திடம் கொடுத்தாவது வேலையைச் செய்தால் பிரயோசனமாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். சொல்லப்பட்ட விடயங்கள் அனைத்தும் உண்மை. ஆனால் இதனை எழுத்து மூலம் உரிய இடத்திற்கு அறிவித்திருந்தால் அதற்குரிய திருத்தங்களை நாங்கள் செய்திருக்கலாம். வாயால் சொல்லிக்கொண்டே இருக்கின்றீர்கள். காலமும் போய்விட்டது. இதனால் சம்மாந்துறைக்குத்தான் நஸ்டம். சென்ற வருடத்தில் முடிக்க வேண்டிய வேலைகளை முடிக்காததால் இந்த வருடத்திற்குரிய பணத்தில் சென்ற வருடத்திற்குரிய வேலைகளைச் செய்கின்றோம். இந்த வருடமும் நிறைவடையப் போகின்றது. இன்னும் வேலைகள் முடிவடையவில்லை. செய்ய முடியாவிட்டால் அதற்கான காரணத்தைக் கூறி அதனை செய்ய முடியாது அல்லது செய்வதற்கு மேலதிகமாக பணம் வேண்டும் என்று எழுத்து மூலம் கூறியிருந்தால் பதில் தந்திருப்பார்கள். எதுவுமே செய்யாமல் காலத்தை இழுத்தடித்து 02 வருடம் ஒரு வீதி போடுவதற்கு. 15 மில்லியன். அதற்குப் பின்னர் கொண்டு வந்த பணத்திற்கான வீதியும் போட்டு முடிந்து விட்டது. இதனால் நமது ஊருக்குத்தான் நஸ்ட்டம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதில் 02 பாதைகள் அவ்வாறே உள்ளது. பண்ட் வீதியும் இதே பிரச்சினைதான்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பண்ட் வீதி மட்டுமல்ல இஸ்மாயில்புர வீதியும் இதே பிரச்சினைதான். கௌரவ உறுப்பினர் கூறியது போல் நாங்கள் கடிதம் கொடுத்தோம். அந்த நேரம் சித்ரா தேவி பொறியியலாளர்தான் அதற்குப் பொறுப்பாக இருந்தார். இவர்களது தொழில்நுட்ப பிரச்சினைகளை சுட்டிக்காட்டினால் அவர்களது தொழில் பாதிப்படைந்து விடும் என்பதனால் நாம் பேசி தீர்மானிப்போம் கடிதம் மூலம் அனுப்ப வேண்டாம் என்றார்கள். நிர்வாக உத்தியோகத்தர்கள் கடிதத்தை அனுப்புமாறு கூறியும். நான் இந்தப் பிரச்சினை தொடர்பாக சித்ரா தேவி பொறியியலாளரிடம் கடிதம் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**தீர்மானம் 06**
மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் 'S' வாய்கால் இருமரங்கிலும் நீர்பாசணத் திணைக்களத்துடன் இணைந்து மர நடுகைத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தைக்காப்பள்ளிப் பிரதேசத்தில் முன்னர் இறைச்சிக்கடை இருந்தது. அதனை மீண்டும் திறக்குமாறு சிலர் கோரியுள்ளனர் சில இறைச்சிக் கடைகள் எடுக்காமல் உள்ளது அதனுடன் சேத்து இதற்கு குத்தகை கேள்வி கோரலாம்.

**தீர்மானம் 07**
தைக்காப் பள்ளிப் பிரதேசத்தில் புதிதாக இறைச்சிக்கடை ஒன்றை திறப்பதற்கு ஏதுவான காரங்கள் இருப்பின் அதனை ஆராய்ந்து திறக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**தீர்மானம் 08**
மாகாண சபைகள் உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அனுமதி கிடைக்கப்பெற்ற இஸ்மாயில் புரம் விளையாட்டு மைதானம், வளத்தாப்பிட்டி விளையாட்டு மைதானம், மல்வத்தை விளையாட்டு மைதானம் போன்ற 03 மைதான திருத்த வேலைகளைச் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 09**
Dump Truck (LL - 6939) வாகனத்திற்கு 04 டயர்களையும் மாற்றம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 10**
JCB வாகனத்தின் 02 முன் டயர்களை மாற்றம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 11**
ஹாஜியார் வீதி வடிகானை திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகள் போடப்பட்டு இடையில் விடுபட்ட குறையாக உள்ள 27 பாதைகள் இணங்கானப்பட்டுள்ளது. அவை 10M இல் இருந்து 60 M வரை உள்ளது. நம்மிடம் உள்ள தொகை 03 மில்லியனுக்குள் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு உள்ளது.

01. முகைடீன் மாவத்தை குறுக்கு வீதி புளக் ஜே கிழக்கு - 02 (12M)
02. கபூர் ஜீ. எஸ் லேன் சம்மாந்துறை - 09 (15M)
03. அம்பாரை 12 ம் குறுக்கு வீதி சம்மாந்துறை - 12 (12M)
04. கல் 01 ம் குறுக்கு வீதி கருவாட்டுக்கல் - 02 (15M)
05. தேன்பானை 1ம் குறுக்கு வீதி கல்லரிச்சல் - 03 (16.5M)
06. மல் 11 மலையடிக்கிராமம் - 02 (14M)
07. வைத்தியசாலை 7ம் குறுக்கு வீதி (15M)

மேற்கூறப்பட்ட வேலைகளைச் செய்வதற்குத்தான் சபையில் உள்ள பணம் போதுமானதாக உள்ளது. மற்றவைகள் எல்லாம் 20M க்கு மேற்பட்டவையாகும். இவைகள் ஊருக்குள் உள்ள பாதைகள்

மல்வத்தையில் ஒரு பாதை உள்ளது. துரையப்பா வீதி 40M அதனையும் செய்தால் நமது சபைபணம் பூரணமாகும். இதில் எந்த ஒரு பாகுபாடும் இல்லாமல் அனைத்து இடங்களிலும் உள்ள வீதி போட்டு இடையில் விடுபட்ட வீதிகள்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்களின் வீட்டுக்கு அருகில் செல்கின்ற வடிகான் வயலுக்குள் செல்வதனால் அந்த வயலுக்குள் குப்பைகள் வருகின்றன. வயல் விதைப்பதற்கு முதல் இது செய்யப்பட வேண்டும். அன்று JCBயை கொண்டுபோய் வெட்டினார்கள். தங்களால் முடியுமானால் அந்த வடிச்சலை கொங்றீட் கானாக ஆற்றில் விட்டால் நன்றாக இருக்கும். இதற்கு வயல் உரிமையாளரும் சம்மதம் தெரிவித்துள்ளார்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த வாய்காலுக்குப் போவதற்கு 150M அல்லது 200M அளவில் உள்ளது. அது பாரிய வடிகான் அதற்குக் குறைந்தது 12 அடி அகலமாவது இருக்க வேண்டும். அதனை கண்டிப்பாக செய்ய வேண்டும். ஆனால் அதனை சபை நிதியின் மூலம் செய்ய முடியாது கிட்டத்தட்ட 15M தேவையாகும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது ஊரின், வடிகான் நீரைக் கொண்டு வயலுக்குள் வைத்துள்ளோம். அது நீர்பாசனத் திணைக்களத்தில் இல்லாத வாய்கால் நமது தேவைக்காகத்தான் அந்த வாய்கால் எடுத்துள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் குறைபாடுகள் இருந்தால் இன்று அல்லது நாளை அவைகளைத் தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீரமுனையில் RKM பாடசாலைக்கு அருகில் 30 அடி மிகுதி வீதி உள்ளது. ஏற்கனவே நான் அதனை எழுதிக் கொடுத்துள்ளேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வீரமுனையிலும் இருக்கலாம். இதில் பிரச்சினை என்னவென்றால் வட்டாரங்கள் என்று பிரிப்பதானால் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வேலை என்றவாறும் நீங்கள் விரும்பினால் செய்யலாம். நான் நினைத்தேன் சின்னச்சின்ன குறை வேலைகளை முடித்தால் வீதிகள் சம்பூரணமாகும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அனைவருக்கும் தெரிந்த வீதி வீரமுனை - 02 இல் வீதி போடப்பட்டு கறுப்புள்ளாட சந்தியில் நிற்கின்றது. அதன் மிகுதி 10M க்குள்தான் உள்ளது. அதனைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வீதியைப் பார்கின்ற போது மனத்தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாகவே இருக்கின்றது. காரணம் முஸ்லிம்களின் எல்லை வரை போடப்பட்டவாறும் மற்றவை விடுபட்டவாறும் உள்ளது. அதனைப் பூரணமாக்கப்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் இனரீதியான பாகுபாடு இல்லை. 20அடி க்கு குறைந்த பாதைகள் அனைத்தையும் முடிப்பதற்கு நாம் தீர்மானம் எடுக்கலாம். அதில் பிரச்சினை வந்தால் ஒரு வட்டாரத்திற்கு ஒரு

வேலை என்றாலும் சரி. சில வட்டாரத்தில் வேலை இல்லை என்றால் அதனை வேலை உள்ள வட்டாரத்திற்குள் போட்டு அவைகளை முடிக்கலாம்.

**தீர்மானம் 12**
எமது பிரதேசத்திலுள்ள பாதைகள் அமைக்கப்பட்டு இரு பாதைகளை இணைக்கும் இடைவெளிகளையும், விடுபட்டிருக்கும் 20M க்குட்பட்ட மிகுதி வேலைகளை சபை நிதி ஒதுக்கீட்டிற்கமைய செய்வதற்கும், அதனுடன் தொடர்புபட்ட கல்வெட், வடிகான் என்பவற்றை பூரணப்படுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ உறுப்பினர் ஏ. யுசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்கம்பிட்டி 01ம் வீதியில் கொங்றீட் இடப்பட்டு எனது வீட்டு சுவருடன் நிறுத்தப்பட்டுள்ளது. 05M அளவிலான பாதை அதனையும் போடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறிப்பாக எனது வட்டாரத்தில் சிறுவர் பூங்காவிற்குள் கல்வெட் உள்ளது. அதனையும் திருத்த வேண்டும். அவ்வாறு வருவதற்குக் காரணம் ஏற்கனவே அவ்விடத்தில் மன் போட்டு நிரப்புவதற்கு முன் அந்நீர் நேராக குளத்திற்குள் சென்றது. இப்போது அவ்விடத்தில் உள்ள குளாய்கும் 03 பாதைகளால் வருகின்ற நீர் போவதற்கு கல்வெட்டில் உள்ள குழாய் போதாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திருத்தங்களைச் செய்யலாம். அதனை புதுப்பாதைக்குள் கொண்டுவரத் தேவையில்லை. அதனை திருத்த வேலைக்குள் எடுத்துச் செய்யலாம். அந்த நேரம் சிறுவர் பூங்காக செய்யும் திட்டத்திற்குள் இவைகள் அனைத்தும் வந்திருக்க வேண்டும். நீங்கள் இவ்விடயத்தை எழுத்து மூலம் அறிவித்திருந்தால் சபை அமர்வின் பின் அதனைப் பார்கலாம்.

கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்களின் முன்மொழிவு தேன்பானை வீதியின் மிகுதி வேலை. அதற்கு அனுமதி வந்துள்ளதா என்பது தெரியாது. ஆனால் அதனைச் செய்ய வேண்டும். செய்யாது விட்டால் இங்கிருந்து போகின்ற அனைத்து நீரும் பள்ளிக்கு அருகில் உள்ள மன்னைத் தோண்டிக் கொண்டு போகின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, புளக் ஜே மேற்கு - 12 இல் இருக்கின்ற நீர் பாசனத்திற்குச் சொந்தமான S வாய்கால், தற்போது அதில் எந்தவிதமான பாவனையும் இல்லை. அதில் போடப்பட்ட குளாய் உடைந்து இன்று பைசிகள் கூட போக முடியாத நிலையில் உள்ளது. எங்களது சபை பணத்தின் மூலம் நீர்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான இடத்திற்கு செலவு செய்ய முடியுமா? 02 பக்கமும் குளாய் உடைந்துள்ளதால் இதனை அத்தியவசியத் தேவைக்குக் கீழாவது கொண்டு வந்து சபை நிதி மூலம் செய்வது சிறந்தது என நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமது பாதை ஒன்று அதற்குள்ளால் செல்லுமானால் நீர்பாசனத் திணைக்களத்தின் அனுமதியுடன் அதனைச் செய்யலாம். ஆனால் நடைமுறையில் அவைகள் பிரதேச சபைக்கு கீழ் வருகின்ற வீதிகள் இவ்வாறான பிரச்சினைகள் உள்ள வீதிகள் அதிகமாக உள்ளது.

இதில் நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். சபையில் கட்டுமான வேலைகளுக்கென்று பண ஒதுக்கீடுகள் இல்லை. அதாவது வீதி, வடிகான் பராமரிப்பதற்காகவென்றோ திருத்த வேலைகள்

செய்வதற்கென்றோ அரசாங்கத்தினால் எந்த ஒரு பண ஒதுக்டகீடும் இல்லை. நாம் நமக்கு வருகின்ற வருமானத்தை வைத்து அந்த சேவைகளை செய்து வருகின்றோம். நாம் மக்களுடன் தொடர்பு கொள்ளும் போது இந்த சபைக்கு வீதி கான் கட்டுவதற்கு பிரதேச சபையில் பண ஒதுக்கீடு இல்லை என்பது அவர்களுக்கு விளங்க வேண்டும்.

முத்திரைக் காசு, வரி தண்டம், இறைச்சிக்கடை, பொதுச்சந்தை போன்றவைகளினால் வருகின்ற பணத்தின் மூலம் தான் நமது சபையை நடாத்துகின்றோம். அந்தப் பணத்தை வைத்தே வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. அதனால் நமக்கு இருக்கின்ற பெரிய சவாலும் அதுதான். அதற்காகத்தான் கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலம் கொண்டு வருகின்ற அபிவிருத்தி வேலைகள் மாகாண சபைக்கு வந்து பிரதேச செயலகத்தின் மூலம் செலவு செய்யப்படுகின்றது. அந்தத் திட்டமிடல்கள் அனைத்தும் பிரதேச சபைக்கு வருமானால் உண்மையக ஒரு திட்டமிட்ட அபிவிருத்திகளைச் செய்யலாம். ஆனால் நாம் எந்த வீதியைப் போட வேண்டும், எந்தக் கல்வெட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கின்ற சக்தி நம்மிடம் இல்லை. அரசியல் கட்சிகளின் மூலம் வருகின்ற பட்டியலுக்கு அங்கீகாரம் வழங்குகின்றோமே தவிர திட்டமிட்டு செய்யக்கூடியதாக இல்லை.

கண்டிப்பாக செய்ய வேண்டிய வேலைகள் இருந்தால் ஏதாவது ஒன்றை நிறுத்திவிட்டு நமது வட்டாரத்திற்குள் செய்ய வேண்டும் என்றில்லாமல் பணம் இருந்தால் செய்ய முடியும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கேட்டது எனது வட்டாரத்திற்குள் அல்ல பொதுவாக இச்சம்பவம் இடம்பெற்றால் என்ன செய்வது? இது திட்டமிட்டு செய்ததல்ல யதார்த்தமாக நடைபெற்ற சம்பவம். அந்தப்பாதையால் மக்களுக்கு செல்ல முடியாது. வாகனங்களும் செல்லமுடியாமல் உள்ளது. இவ்வாறான அத்தியவசியமான தேவை ஏற்படுகின்ற சந்தப்பத்தில் அதனைச் செய்து கொடுக்கத்தான் வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் இந்தப் பிரேரனையைக் கொண்டு வந்திருக்கின்றீர்கள் அதனை சென்று பார்வையிட்டு நிச்சயமாக அது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றால் நாம் வீதி போடுவதை நிறுத்தி விட்டு அதனைச் செய்யலாம். அதனைக் குற்றச்சாட்டாக கொண்டுவராமல் அதனைக் கூறுங்கள்.

**வரவு செலவுத்திட்டம்** பற்றிய சுருக்கமான விளக்கம். நமது நிர்வாகத்தினை நடாத்துவதற்கு அதாவது நாளாந்த செலவுகள் 92 மில்லியன் தேவை. இதில் 48 மில்லியன் நிரந்தர உத்தியோகத்தரின் சம்பளம் மீளளிப்பு செய்யப்படுகின்றது. 44 மிலிலியன் நாம் போட வேண்டும். நாளாந்த செலவுகளைச் செய்து கொண்டு போவதற்கு நமது சபைக்கு வருமானமாக முத்திரைக் காசு 07 மில்லியனில் இருந்து 10 மில்லியன் வரை ஒரு வருடத்திற்கு மொத்தமாக வரும். 2018ம் ஆண்டுடில் 06ம் மாதம் வரை முத்திரைக் காசு வந்துள்ளது. இருப்பது 06 மாதத்திற்குரிய பணமும் அடுத்த வருடத்திற்குள் வரக்கூடிய பணத்திற்கும் தான் மதிப்பீட்டறிக்கை நாம் எடுத்துள்ளோம். 12 மில்லியனுக்குள் வரலாம்.

நீதிமன்ற தெண்டத்தின் மூலமும் 06, 08 மில்லியனுக்குள் வருகின்றது. வரி என்று மதிப்பீடு செய்வது 04 மில்லியன் வரைதான். இது சிக்கலுக்குரியது. ஏனென்றால் 01 மில்லியன் அல்லது 02 மில்லியனுக்குள்தான் வரலாம். அவை கூடுமானால் நாம் நமது வேலைகளை இலகுவாக செய்யலாம். அரசாங்க நிறுவனங்களும் உதவிகள் செய்யும் போது நாம் எவ்வளவு சொந்த வருமானம் எடுக்கின்றோம் என்பதைப் பார்கின்றது. இறைச்சிக்கடை, பொதுச்சந்தை இவை இரண்டும் 20 மில்லியன் வருமானம். மொத்தமாக 48 மில்லியன் நாம் மதிப்பீடு தயாரிக்கின்றோம். அபிவிருத்தி வேலைகள் ஒன்றும் இல்லாமல் சபையை நடாத்துவதற்குத் தேவைப்படுகின்ற பணம் 48 மில்லியன். சென்ற காலங்களில் அரசாங்கம் சபைகளுக்கு ஒவ்வொரு மாதமும் வாகனம், வடிகான், வீதிகள் போன்ற திருத்த வேலைகளுக்கு 10 மில்லியன் தந்தார்கள். அவைகளில் சேமித்து வங்கியில் போட்ட பணத்தில் தான் இன்னும் நமது சபை நடக்கின்றது.

நமது மொத்த செலவீனம் 121 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்தடவையாக 8 மில்லியன் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆனால் இன்னும் 06, 07 மில்லியன் ஒரு வைப்பாக இருக்கின்றது. அதனை நாம் அடுத்த வருடத்திற்குள் செலவு செய்து முடிக்கும் எண்ணம் இருக்கக்கூடாது. இந்த வரவு செலவுத்திட்டத்திலும் நிர்வாகத்திலும் கௌரவ உறுப்பினர்களின் பங்களிப்பும் தேவை. 503 இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் பார்கலாம். நாம் மக்களுக்கு வீதி லாம்பு போடுவதற்கு 2.5 மில்லியனுக்கு மேல் செலவாகின்றது.

இந்த வருடத்தில் 09ம் மாதம் வரை 1.9 மில்லியன் வீதி இலாம்பு பராமரிப்புக்கு மாத்திரம் செலவு செய்துள்ளோம். நமது சபைக்கு வீதி லாம்பு போடுவதற்கும், திண்மக் கழிவிற்குமே பாரிய செலவு ஏற்படுகின்றது. இதில் 50 வீதத்தைக் குறைத்தால் நிச்சயமாக நாம் அந்தப்பணத்தை வேறு வேலைகளுக்கு பயன்படுத்தலாம். திண்மக்கழிவு காரைதீவிற்குச் செல்வதை இன்றும் 03 மாதத்திற்கு நீடிக்க வேண்டும். அபிவிருத்தி வேலைகளுக்கென்று பணம் இல்லை. நகர திட்டமிடல் அமைச்சின் தயவினால்தான் பெரிய பெரிய அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றது. அதற்கு நாம் நமது சபை சார்பில் கௌரவ அமைச்சருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**தீர்மானம் 13**

காரைதீவிற்கு திண்மக்கழிவு நிலையத்திற்கு திண்மக்கழிவினை வழங்குவதற்கு மீண்டும் 03 மாத காலத்திற்கு நீடிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**தீர்மானம் 14**

சென்ற மாதம் 01.10.2018 தொடக்கம் 31.10.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்ற அரசாங்கத்தில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வீதி என்ற அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் 52 வீதிகள் அமைத்தோம். இல்லாவிட்டால் நமது சபையினால் வேறு எதுவும் செய்ய முடியாது. அதனால்தான் நான் சபை உறுப்பினர்களிடம் கூறுவது மக்களிடம் இவைகளைக் கூறாவிட்டால் அதனைத் திருத்த முடியாது. அனைவரும் லைட், கான் போட்டுக் கொடுப்பதென்பது பாரிய சவால். ஆனால் அதிதியவசியமான தேவைகளை செய்து கொடுக்கத்தான் வேண்டும். இதனை மக்களும் உணர வேண்டும்.

இது தொடர்பாக உங்களது கருத்துக்கள் இருந்தால் கூறலாம். நமக்கு 12 மில்லியனுக்குள் ஒவ்வொரு வருடத்திலும் குறைபாடாக வரலாம். அதனை நீங்களும் விளங்க வேண்டும். அதனை எதனால் குறைப்பதென்றால் திண்மக்கழிவு, வீதி லாம்பு போடுவது போன்றவைகளைக் குறைத்தால் பணத்தை மீதப்படுத்தலாம். அதிலும் திண்மக்கழிவிற்கு அதிகம் செலவாகின்றது. காரைதீவு யாட்டுக்கு சென்று பார்த்தால் மக்கள் எந்த ஒரு அக்கரையும் இல்லாமல் கழிவுகளை தரம்பிரிக்காமல் போடுவதை உங்களால் கண்டு கொள்ள முடியும். இதனால் நமது அதிகமான பணம் அதற்கே செலவாகின்றது. 01 டொன்னுக்கு 950 ரூபா போகின்றது. இந்த வரவு செலவுத்திட்டத்தில் உங்களுக்கு திருத்த வேண்டியவை அல்லது சேர்க் வேண்டியவைகள் அல்லது உங்களது கருத்துகளை குறிப்பிடலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2019 ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நாம் புதிதாக பாதைகள் புணரமைப்பு சம்பந்தமான 03 மில்லியன் ஒதுக்கப்படுவதை கடந்த 12 வருடங்களாக எமது பிரதேச சபைக்குட்பட்ட பாதைகள் புணரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற பாதைகளைப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று நான் முதலாவது கூட்ட அமர்வில் கூறியிருந்தேன். எனவே அதனை எதிர்வரும் ஜுன் மாதத்திற்குள் பராமரிபு செய்ய வேண்டும் என்பதோடு, 2006 ம் ஆண்டில் இருந்து செய்யப்பட்டு வருகின்ற கொங்றீட் பாதைகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. அதற்கு தாரிட்டால் குறைந்தது இன்னும் 03 வருடத்திகு உபயோகிக்கக்கூடிய வாய்பபு கிடைக்கும் எனவே அதனை கரிசனைப்படுத்தி அதற்கு 03 மில்லியன் ரூபா ஒதுக்க வேண்டும் என்று வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திருத்த வேலைகளுக் கென்று ஒரு தொகை இருக்கின்றது. நாம் இன்னும் புதிதாக கட்டிக் கொண்டிருக்காமல் இருப்பவைகளை பராமரிபதற்கென்று சில தொகை ஒதுக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் 304: 2 இல் வருவது வெளியில் இருந்து வருகின்ற பிரமான அடிப்படையிலான குறிப்பிட்ட தொகை நன்கொடைகளைக் குறிப்பிடுகின்றது. அவை வெளியில் இருந்து வரும் பணம். இல 304 இற்குள் வருகின்ற வாகனத் திருத்தம், பாதைகள் திருத்தம் வடிகான் திருத்தம் போன்ற வற்றுக்கு 1.5 மிலிலியன் மடுவம் திருத்தத்திற்கு 05 இலட்சம், சனசமூகங்கள் திருத்தத்திற்கு 01 இலட்சம் ரூபா, உப அலுவலக கட்டடத்திருத்தத்திற்கு 07 இலட்சம் ரூபா, சிறுவர் பூங்கா திருத்த வேலைகளுக்கு 03 இலட்சம் போன்றவைகள். ஆனால் அதற்கு கீழ் வருவது நன்கொடைகள் கிடைக்கலாம் என்பதற்காகத்தான் அவை சேர்க்கப்பட்டுள்ளது.

இல. 309 பார்த்தால் அலுவலக கட்டடத்திற்கு ஒரு செலவும் ஒதுக்கப்பட வில்லை. புதிய வடிகான் அமைத்தல் 02 மில்லியன் ரூபாவும், சனசமூக நிலயக் கட்டடத்திற்கு 02 இலட்சம் புதிய பாதைகள் அமைத்தல். ஆனால், உங்களது கருத்து புதிய வேலைகளைக் குறைத்து பராமரிப்பு வேலைகளை அதிகப்படுத்துமாறு கோருகின்றீர்கள். அவை சிறந்த என்னம். பராமரிப்பு கண்டிப்பகாகத் தேவை. இல்லாவிட்டால் அவைகள் இல்லாமல் போய்விடும். அடுத்த முறையில் கொங்றீட் வீதிகள் போடும் போது தார் இடுவதும் கண்டிப்பாக வர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2006ம் ஆண்டு போடப்பட்ட வீதி ஒரு இஞ்சி கல்லால் போடப்பட்டது. தன்னீர் அரித்து அரித்து சீமெந்து மட்டும்தான் உள்ளது. அதுவும் களன்டால் கம்பிதான் தெரியும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வரவு செலவுத்திட்டத்தில் 03ம் பக்கத்தில் வருமான மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள இயந்திர வாடகைகள் பற்றிய ஒரு தெளிவான விளக்கம் தந்தால் இலகுவாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
JCB, Motor Grader, Janaza வாகனம், Water Bowser போன்ற வாகனங்களை வாடகைக்கு கொடுப்பதனால் வருகின்ற வருமானங்கள் தான் அவை. 2018 இல் JCB க்கு வாடகை அதிகம் என்பதனால் யாரும் வருவதில்லை. அவைகளுக்கு நாம் அடுத்த அமர்வில் புது வருடத்திற்குரிய வாடகைகளை தீர்மானிக்க வேண்டும். அவைகள் வருமான சக்தியாக மாற வேண்டும். இவ்வாகனங்களுக்குரிய வாடகையை மாற்றுவதற்கு கௌரவ உறுப்பினர்களின் கருத்தைக் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த வாகனங்களுக்கு போடப்பட்டுள்ள இயக்குனர்கள் பொருத்தமில்லாததனால்தான் நமது வாகனங்கள் போகாமல் இருப்பதற்கு காரணமாக

இருக்கின்றது. இவர்களை நாம் தொடர்ந்து வைத்திருக்காமல் அவர்களை பயிற்சிக்கு அனுப்ப வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்பந்தமான முறைப்பாடு என்னிடமும் வந்துள்ளது. JCB இயக்குனர் விருப்பம் இல்லாமல் அந்த வேலையை செய்ய ஆரம்பிப்பதாகவும், அதனை என்னால் செய்ய முடியாது என்பதாகவும் வேலை செய்யத் தெரியாதவராக இருக்கின்றார் என்ற முறைப்பாடும் வந்துள்ளது. அது மட்டுமல்ல நிரந்தரமாக்கப்பட்ட சாரதிகளுக்கு வாகனம் ஓடத்தொரியாதவர் என்று பயிற்சி கொடுப்பதாகவும் குற்றச் சாட்டு வந்துள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபைக்கு சாரதிகள் எடுக்கும் போது முதல் நிபந்தனை நீங்கள் திண்மக்கழிவு Tractor ஓட வேண்டும். அனைத்து சாரதிகளிடமும் Heavy Licence இருக்கின்றது. அதற்கு புதியவர்கள் வந்ததும் பழைய சாரதிகள் எங்களுக்கு பெரிய வாகனங்கள் தாருங்கள் என்று கேட்டவுடன் அவர்கள் 08,10 வருடங்கள் Tractor ஓடியவருக்கு Dump Truck, Compactor க்கு அனுப்பினால் கண்டிப்பாக அவருக்கு பயிற்சி கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் புதியவர்கள் கூறுவது நாங்கள் Dump Truck ஓடியவர்கள் எங்களுக்கு தரலாம் தானே என்பார்கள். இதனால் நிர்வாகத்தில் பல பிரச்சினை ஏற்படுகின்றது. அதனால் அவர்கள் பழையவர்களுக்கு முதல் இடம் கொடுத்த பின்னர் அவர்களுக்கு கொடுக்கலாம் என்று நினைத்ததாகவும் இருக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Tractor சாரதி அதைத்தான் ஓட வேண்டும். அதற்காகத்தான் அவருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அவரால் Dump Truck ஓட முடியாது. அவ்வாறு சென்றால் வாகனத்திற்கு சேதம் ஏற்படலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் உங்களிடம் தயவாகக் கேற்பது ஊழியர்கள் வந்து உங்களிடம் கூறுவதை சபைக்குக் கொண்டு வருவதற்கு முன் நிர்வாகத்துடன் பேசி இதன் பின்னனி என்ன என்பதை எடுத்து வர வேண்டும். இல்லாவிட்டால் இதில் நியாயம் எதுவும் விளங்காது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்பந்தமாக நான் கேட்கவும் இல்லை. அறியவும் இல்லை. நமது JCB இயக்குனர் பூமரத்து சந்தியில் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு அதிருப்பதியைத் தந்தது. இவ்வாறு இருந்தால் நமது வாகனத்தை எடுப்பதற்கு மக்கள் விரும்பமாட்டார்கள். சம்மாந்துறை பிரதேச சபையில் JCB இருந்தும் மக்கள் வராததற்கு காரணம் ஒழுங்கான இயக்குனர் இல்லாததுதான். அவரால் செய்ய முடியாவிட்டால் நாம் நாள் சம்பளத்திற்காவது அவர் சிங்களவராக இருந்தாலும் பரவாயில்லை. சிறந்த இயக்குனர் ஒருவரை நியமித்தால் நன்றாக இருக்கும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற கிழமை நான் செயலாளரிடம் கூறியது ஒவ்வொரு வாகனத்திற்கும் தகுதியான சாரதிகளை நியமித்து அவர்களிடம் கூடுதலான வருமானங்களைப் பெற வேண்டும் என்ற ஆலோசனைகளையும் வழங்குமாறு பணித்தேன்.

நீங்கள் குறிப்பிடும் சாரதி 04 வருடத்திற்கு மேல் வேலை செய்பவர். இதற்கு முதல் குற்றச்சாட்டு வந்ததோ தெரியாது. ஆனால் என்னிடம் அந்த சாரதி பற்றிய முதல் குற்றச்சாட்டு. நிச்சயமாக நாம் அதனை விசாரித்து அதற்குப் பொருத்தமில்லாதவர் என்று வந்தால் அதற்கு பொருத்தமானவரை நமது சபைக்குள் இருந்தால் போடலாம். இல்லாவிட்டால் வெளியில் இருந்து கொண்டு வரலாம்.

நாம் அந்த வாகனங்களுக்கென்று ஆட்கள் எடுக்க வில்லை. அரசாங்கத்தினால் அனுமதி கிடைத்தவைகளுக்கு இங்கு சாரதியாக இருந்தவர்களை நியமித்தோம். அந்த ஊழியர்கள் இவ்விடத்தில் இல்லா விட்டாலும் எனக்கு தெரிந்ததை நான் கூற வேண்டும். எந்த வேலைக்கும் எந்த நேரத்தில் அழைத்தாலும் அதாவது இரவு 12 மணிக்கு அழைத்தாலும் முகம் சுழிக்காமல் எந்தச் சாட்டுக்களும் கூறாமல் வருவார்கள். அவர்கள் 02 பேர் நௌபர் என்பவரும், பௌசர் என்பவரும். இவர்கள் இருவரும் 24 மணி நேரமும் வேலையில் இருப்பவர்கள். ஜனாசா வாகனத்திற்கு, கோயில் விடயங்களுக்கு நீர் வழங்குவதற்காக Bowser செல்வதற்கு அழைத்தால் எந்தக் காரணமும் கூறாமல் வருவார்கள். ஒரு நாளும் அவர்கள் பற்றிய முறைப்பாடு வந்ததில்லை. இவ்வாறான வேலைகளால் அவர்களது பிழைகள் சுற்றிக்காட்டப்படாமல் இருந்திருக்கலாம். எனவே அவர்களிடம் அந்தக் குறைபாடு இருந்தாலும் அதனை நிறைவு செய்வது நமது கடமை.

அடுத்த வருடத்திற்கு அவர்களது சம்பளத்திற்கு மேலாக அவர்கள் வருமானம் வரக்கூடிய வாகனங்களாக மாற வேண்டும். ஒவ்வொரு வாகனமும் 04 வருடத்திற்கு மேல் பழமைவாய்ந்தது. அந்தவகையில் நமது வாகனங்கள் ஓரளவு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. அவைகளில் நான் கவனம் செலுத்துகின்றேன்.

வருமான மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம், அப்துல் மஜீட் மண்டபம், இவைகளையும் நாம் வாடகைக்கு விடும் போது அதன் தொகையை அதிகரிக்க வேண்டும். காரைதீவு திருமண மண்டபத்திற்கு 40,000 ரூபா வாடகை பெறப்படுவதாக ஒரு தகவல் கிடைத்துள்ளது. எனவே எனது சிந்தனை இதனைப் பராமரிப்பதற்கு பணம் தேவை. அப்துல் மஜீட் மண்டபத்திற்கு பெயின்ட் பூசி 05 வருடமாகின்றது. எனவே ஆகக் கூடுதலான தொகை எவ்வளவு எடுக்கலாம் என்ற உங்களது அபிப்பிராயங்களைக் குறிப்பிடலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கு அண்டசீட் அடித்து AC பூட்டி வாடகையைக் கூட்டினால் சிறந்ததாக இருக்கும். அவ்வாறு செய்தால் நாம் ACக்கு அல்லது AC இல்லாமல் என்ற ரீதியில் வாடகை பெற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எனது சிந்தனை அதனை இன்னொரு தட்டாக மாற்றினால் AC போடுவதற்கு இலகுவாக இருக்கும். போல் சீலிங் போடுவதானால் 10 அடி இறக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப்துல் மஜீட் மண்டபத்திற்கு அதிகமான மக்கள் இட வசதி இல்லாததனால்தான் வருகின்றனர் எனவே அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வறிய மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன். ஆனால் யார் வறியவர் என்று கண்டு கொள்ள முடியாமல் உள்ளது. காரணம் சமுர்தி என்ற பெயரில் வசதி படைத்தவரும் பெற்று வருகின்றனர்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப்துல் மஜீட் மண்டபத்திற்கு சிறந்த கதிரைகளைப் போட்டு வாடகையைக் கூட்டலாம். அதாவது வாடகையைக் கூட்டும் போது அவ்விடம் விசேடமாக காட்சியளிக்க வேண்டும். இதனை நடாத்துவதற்கு பணம் போதாவிட்டால் சேவை அடிப்படையில் நடாத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவைகளுக்கு 15,000 ரூபாவும் VAT உம் பெறலாமா?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 15,000 ரூபாவும் VAT உம் எடுக்கலாம். அத்தோடு எமது நீண்டகால சிந்தனையாக எமது முன்மொழிவு இருக்க வேண்டும். நமது ஊர் மக்கள் AC இல்லாததனால் வெளி ஊர்களுக்கு செல்கின்ற நிலமை உருவாகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
AC பொருத்தலாம். நீங்கள் கூறிய முன்மொழிவைச் செய்யலாம். போல் சீலிங் அடிப்பதற்கு 05 இலட்சம் செலவாகும். மேடையில் போடப்பட்டுள்ள காபட்டை நீங்கள் சென்று பார்தால் விளங்கும் அது எவ்வாறு மக்கள் சேதமாக்கியுள்ளார்கள். இது நமது சொத்து அதனை பாதுகாக்க வேண்டும் என்ற என்னம் மக்களுக்கு வருவதில்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திருமண நிகழ்வுகளுக்கு 15000+VAT அறவிடலாம் ஆனால் Work Shop, பாலர் பாடசாலை நிகழ்வுகளுக்கு குறைத்து எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவைகள் மணித்தியாலத்திற்கென்று அறவிடப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுக் கட்டடத்தொகுதியில் SLIATE வேலையாட்கள் இருக்கின்றார்களா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எனக்கு அதில் உடன்பாடு இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். அவை சபையின் வருமானத்தை இழந்து அவர்களுக்கு கொடுத்தது. அதற்கு நாம் முதலாவது சபை அமர்வில் வாடகைத் தொகை அதிகரித்து எடுக்க வேண்டும் என்று அவர்களை அழைத்து பேசி 60,000 ரூபாவும் செப்டம்பருடன் முடிவடைய வேண்டும் என்றும் கூறினோம். ஆனால் இன்னும் அந்த வாடகைப்பனம் கட்டவும் இல்லை. அவர்களுக்கு வழங்கப்பட்ட காலமும் முடிவடைந்து விட்டது. அவர்கள் அங்கு வருவதற்கு விடக்கூடாது என்று நான் கட்டளை இட்டுள்ளேன். தற்போது விடுமுறை காலம். அவர்களது நிருவாகத்தில் ஆட்கள் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டு இருக்கின்றனர். நமது கடிதங்களுக்கு எந்தப்பதிலும் இல்லை. பணமும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காரணம் இது தனியார் நிறுவனம் அவர்கள் இங்கு இல்லாவிட்டால் வேறு எங்காவது போய் வேலை செய்வார்கள். எங்களது சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய வழிகளைத்தான் நாம் பார்க்க வேண்டும். அத்தோடு அதற்குள் வசதிகளையும் ஏற்படுத்தி அதற்குரிய வாடகையையும் கூட்டினால் சிறந்ததாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வாடகையை கூட்டுவதுடன் Badminton Court எந்த நிகழ்வுக்கும் பாவிக்க முடியாது என்றும் கட்டளை இட்டுள்ளேன். காரணம் விளையாட்டு மைதானத்தை விளையாடுவதற்கு தராமல் நீங்கள் திருமனம், வலிமா போன்ற வேறு நிகழ்வுக்ளுக்குப் பயன்படுத்துகின்றீர்கள் என்ற குற்றச்சாட்டு வந்தது.

நான் கூறினேன் அதனைப் பாவிப்பதும் சம்மாந்துறை மக்கள் தான் நீங்கள் 01 கிழமை அல்லது 02 கிழமை ஒரு மனித்தியாலம் விளையாடிவிட்டு விடுவீர்கள் என்று கூறிவிட்டு அவர்களுக்கு Badminton Court இல்லாமல் கொடுக்கலாம் என்று நானும் யோசித்தேன்.

**தீர்மானம் 15**

விளையாட்டுக் கட்டடத் தொகுதியிலுள்ள SLIATE நிறுவனத்தினர் அவர்களின் ஒப்பந்தத்தின்படி வாடகைப்பணம் செலுத்தாத பட்சத்தில் அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும், இனிவரும் காலங்களில் அக்கட்டடத்ததை அவர்கள் உபயோகிக்க முடியாது என்றும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

**CTB Work Shop** விடயத்தைப் பார்கின்ற போது நாம் அதற்கு முன்னால் உள்ள கட்டடங்களைத் திருத்திக் கொண்டு வருகின்றோம். அது முடிந்ததும் அவ்விடத்தில் ஒரு எழுச்சி வரும். ஆனால் CTB Work Shop 06 வருடத்திற்கு முன்னர் நோட்டிஸ் கொடுத்தோம் அதன் பின்னர் DCC கூட்டத்தில் அதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றும் ஊரின் சொத்து என்றெல்லாம் கூறி அது நிறுத்தப்பட்டது.

தற்போது நவம்பர் 30 ஆம் திகதியுடன் அவ்விடத்தில் இருந்து எழும்ப வேண்டும் என்று நோட்டிஸ் கொடுத்துள்ளோம். அதன் பின்னர் அவர்கள் என்னிடம் வந்தார்கள் நான் கூறினேன் உங்களுக்கு நான் 06 வருடங்களுக்கு முன்பே நோட்டிஸ் தந்துவிட்டேன். 06 வருடமாக அதற்குத் தீர்வு கானவில்லை. நீங்கள் 10, 15 பேருக்காக பொது மக்களது தேவைகளை பூர்தி செய்து கொடுக்காமல் இருக்க முடியாது. இது சபையின் சொத்து. அவசரகாலத் தேவைக்காக தரப்பட்டது. நீங்கள் அவ்விடத்தை விட்டு சென்றால்தான் அவ்விடத்தை புதுப்பிக்க முடியும் என்று கூறியவுடன் அவர்கள் MP யிடம் சென்றமாதிரியே இருக்கின்றது. இன்னும் அவர்கள் எழுத்து மூலம் அறிவிக்கவில்லை. அறிவித்தல் தராத பட்சத்தில் நாங்கள் அவர்களை வெளியேற்றுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அங்கிருக்கின்ற 10, 15 பேர் என்று பார்காமல் ஊரில் இருக்கின்ற சொத்தென்று நாம் அதனைப் பார்க்க வேண்டும். கிழக்கு மாகாணத்திற்கு பொதுவான Work Shop. பிரதேச சபையினால் ஏன் எங்களுக்கு DCC கூட்டத்தில் CTB Work Shop னை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு பாம் வட்டைக்குள் காணி கேட்க முடியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதற்கு பாம் வட்டைக்குள் காணி கொடுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 05 ஏக்கர் காணி கொடுக்கப்பட்டு 1½ ஏக்கராக இருக்கின்றது. உரிய காணி இல்லாததனால்தான் அவர்களால் எழும்ப முடியவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த விடயத்தில் நான் ஈடுபட்டு அமைச்சர்களிடமும் சென்றேன். அம்பாரை, கல்முனையில் CTB கட்டடம் பாவனையில் இல்லாமல் உள்ளது. அந்த Work Shop கல்முனை அல்லது அம்பாரையில் இருக்க வேண்டும். யுத்த காலத்திற்காகத்தான் அதனை இங்கு கொண்டு வந்தார்கள்.

நான் முன்னின்று சபை அங்கத்தவர்களிடம் கதைத்து நியாயப்படுத்துகின்றேன் என்று நான் அர்களிடம் கூறினாலும் சம்மாந்துறையில் கண்டிப்பாக Work Shop தேவை என்று CTB Dipo

வினால் கடிதம் கொண்டு வாருங்கள் என்று கூறியவுடன் அவர்களால் முடியாது என்று கூறிவிட்டார்கள். அவ்வாறென்றால் உங்களை அவ்விடத்தில் வைத்திருப்பதென்றால் CTBயால் தான் முடியும். எங்களால் முடியாது. எங்களது இடம் எங்களுக்கு வேண்டும். நான் ஊருக்காகத்தான் கேட்கின்றேன் நீங்கள் ஊருக்காக வையுங்கள் என்று கூறுகின்றீர்கள். எவ்வாறு வைப்பது? நீங்கள் உங்களுக்குரிய இடத்தைத் தேடுங்கள் என்று கூறினால் அவர்கள் நீங்கள் எடுத்துத் தாருங்கள் என்று கூறினார்கள். அது எனது வேலையில்லை நான் பிரதேச சபை வேலைதான் செய்வுது என்று நான் கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனிப்பட்ட ரீதியில் பார்க்காமல் சபையினால் ஒரு முடிவெடுப்போம் அவர்களுக்குரிய நிலத்தை அடையாளப்படுத்தி கொடுத்த பின், உங்களுக்கு இடம் தந்துள்ளோம் நீங்கள் உரிய அமைச்சுக்குப்போய் கட்டடத்தை கொண்டுவருவது, கட்டடம் கட்டுவது உங்களது வேலை. ஆனால் அவசரமாக எழும்ப வேண்டும் என்று கூறாமல். ஏனென்றால் இடத்தைக் காட்டாமல் எழும்பச் சொன்னால் அவர்கள் எங்கு போவது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு நாம் பார்க வேண்டியது CTB நலன் அல்ல. சபை நலனையும் மக்கள் நலனையும் பார்க்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு நாம் அனைவரும் முடிவெடுத்துள்ளோம் அந்த முடிவின்படி நான் அவர்களுக்கு நோட்டிஸ் கொடுத்து விட்டேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கூறியது எவ்வாறென்றால் அதற்குரிய இடத்தைக் காட்டி விட்டுத்தான் எழும்ப வேண்டும் என்றுதான் கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அது 1½ ஏக்கர் நிலப்பரப்பு அது கட்டடம் கட்டுவதற்குப் போதாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவ்விடத்தில் நீதிமன்றம் வந்துள்ளதனால் Work Shop வேலைகள் செய்வது கஸ்டம் என்பதுதான். நீங்கள் கூறிய விடயத்தை வரவேற்கின்றேன். பாம் வட்டையில் அவர்களுக்குரிய காணியை ஒதுக்கிவிட்டு எழும்புமாறு கூறுவோம். காணியைப் பெற்றுக் கொடுக்குமாறு பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் உங்களுக்கு இடம் ஒதுக்கி உள்ளோம் நீங்கள் 06 மாத காலத்திற்குள் எழும்ப வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று கூறுவோம். அது இல்லாமல் அதனை உடனடியாக எழும்பச் சொன்னால் நமது ஊரின் வளத்தை இழப்பதாகத்தான் இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தக் குற்றச் சாட்டு வரமுடியாது. காரணம் 06 வருடமாக இதனைக் கூறிக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு போவதற்கு இடம் இல்லை, கட்டம் இல்லை என்ற குற்றச்சாட்டை கூறிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு கட்டடம் தேடிக் கொடுப்பது நமலல்ல.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இடத்தைத் தேடிக் கொடுப்போம் கட்டடத்தை அவர்கள் கட்டலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவர்கள் இடத்தைத் தேடி வரவேண்டும். அவர்கள் இடம் தேடி வராத பட்சத்தில் நாம் தேடிக் கொடுக்க முடியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இரண்டு பேர்களினதும் கருத்தை உள்வாங்கியவனாக,

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கொடுத்த நிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கும் அந்த நேரம் CTB Work Shop ஐ எடுத்துக் கொண்டு அந்தக் காணிக்குள் சென்றிருந்தால் நீதிமன்றம் அங்கு போயிருக்காது. அனைத்தும் ஊருக்குரியதுதான்.

நீதி மன்றத்தை கொண்டு வருவதற்காக நாங்கள் மிகவும் சிரமப்பட்டோம். அதனை இந்த ஊர் மக்களும் அறிந்த விடயம்தான். ஆனால் இந்த நீதி மன்றம் அவ்விடத்திற்கு சென்றதால் அதற்கு இன்னும் எதிர்காலம் பற்றி கூடுதலாக சிந்திக்க வேண்டி உள்ளது. அதனால் சபைக்கு வருகின்ற வரியையும் காணலாம். இந்த ஊரில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களையும் காணலாம்.

நீதி மன்றத்திற்கு கொண்டு செல்கின்ற மண்கள் அருகில் உள்ள இடங்களில் போடப்படுகின்றது. அவைகள் சரியான முறையில் ஊருக்கு வரவேண்டிய சொத்துக்கள். எனவே நீதி மன்றத்தை சரியாக கொண்டு செல்வதற்கு அந்த நிலம் போதாமல் உள்ளது. இன்னும் பல கட்டடங்களைக் கொண்டு வருவதற்கு கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போன்று CTB க்குரிய காணியைப் பெற்றுக் கொடுப்பதோடு CTBக்காக ஒதுக்கப்பட்ட காணியை சம்மாந்துறை நீதவான் நீதி மன்ற கட்டடத் தொகுதிக்கு காணி எடுத்துக் கொடுக்கும் ஒரு மசோதாவையும் சபை மூலமாக முன்னெடுக்க வேண்டும் என்று இந்த சபைக்கு முன்மொழிவைச் செய்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அங்கு கொண்டு வருகின்ற மன்னை நமது சபைக்கு எடுப்பதற்கு முன்னுரிமைப்படுத்துமாறு கூற முடியுமா?

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது சபை செயலாளர் மூலம் கடிதம் போகுமானால் பெற்றுக் கொள்ளலாம்.

**தீர்மானம் 16**
பழைய மார்க்கட்டில் இயங்கிவரும் CTB Work Shop இனை இயங்க வைக்க பிரதேச செயலாளரிடம் பிரிதொரு இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் இருக்கின்ற கட்டடம் திருமண நிழ்வுகளுக்கு பெண்கள் இருப்பதற்குக்கூட இடம் போதாமல் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்காகத்தான் வெளியிலும் கொட்டில் அடிப்பது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போன்று அப்துல் மஜீட் மண்டபத்திற்கு எடுக்கின்ற தொகையையே விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்கும் 15,000 ரூபாவும் VAT உம் எடுக்கலாம்.

**தீர்மானம் 17**
அப்துல் மஜீட் மண்டபம், விளையாட்டுக் கட்டடத் தொகுதி போன்றவற்றுக்கு 12 மணித்தியாலத்திற்கு 15,000 ரூபா வும் VAT ம் வாடகை பணமாக பெற்றுக் கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம். சித்தி நிலுவ்பா |

**தீர்மானம் 18**

சமர்ப்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்தினை ஏற்றுக் கொள்வதற்கு இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபையின் கட்டுப்பாட்டு விதிக் கோவைக்கு அமைய அண்மையில் உள்ளுராட்சி மன்றத்தினால் நடாத்திய பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களும் சில பிரச்சினைகளை கதைப்பதால் மிகவும் மனவருத்தத்திற்குள்ளாகின்றது. ஏனென்றால் சபையின் தவிசாளர் பேசிக்கொண்டிருக்கும் போது இடையில் கதைப்பதும், இன்னொரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது மற்றொருவர் குறுக்கிடுவதனையும் முற்றாக தடுக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். காரணம் அந்தப் பயிற்சிப்பட்டறையில் கட்டுக் கோப்புகள் பற்றி விளக்கமாகக் கூறியும் மீண்டும் மீண்டும் நாங்கள் தவறுகளை விளைவிப்பதென்பது ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

சபையின் போது உறுப்பினர்கள் கடிதங்களைக் கொண்டுவந்து வாசிப்பது தவறு என்பதையும் இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன். ஒருவர் ஒரு பிரேரனை மட்டும்தான் சமர்ப்பிக்க வேண்டும். என்பதையும் கூற விரும்புகின்றேன். ஏனென்றால் எங்களது கொளரவ உறுப்பினர்களில் அதிகமானவர்கள் அப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள வில்லை. அவர் எதைச் சுட்டிக்காட்ட விரும்பினாலும் ஒன்றை மட்டும் தான் கூற வேண்டும். மற்றவருக்கும் இடம் கொடுக்க வேண்டும். இன்னொரு வட்டாரத்தில் உள்ள பிரச்சினைகளை அந்த வட்டாரத்தில் உள்ள கௌரவ உறுப்பினர் மட்டும்தான் பேச வேண்டும். வேறு ஏனையவர் பேசினால் அந்த உறுப்பினருக்கு பேசுவதற்கு எதுவும் இருக்காது. பொது மக்களிடம் போய் நான் பேசிவிட்டேன் என்று பெருமையடிப்பார்கள். எனவே சபையில் உள்ள கட்டுப்பாடுகளை நன்கு விளங்க வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களையும் உங்கள் மூலமாக கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 09 ம் திகதி உள்ளுராட்சி உதவி ஆணையாளரின் அனுசரனையுடன் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. என்னைப் பொறுத்த மட்டில் நானும் இந்தப் பிரதேச சபையில் புதியவன். நான் விட்ட பிழைகளை அன்று அந்தப் பயிற்சிப் பட்டறையில் விளங்கிக் கொண்டேன். அதே நேரத்தில் தவிசாளர், உறுப்பினர்களது கடமைகள் பற்றியும், ஒழுக்க விழுமியங்கள் பற்றியும் கற்றுக் கொண்டேன். உண்மையில் பயிற்சிப்பட்டறையின் பின்னர் நடைபெறுகின்ற இந்தக் கூட்டத்தில் ஏகப்பட்ட தவறுகள் நடைபெற்றிருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. இனிவரும் காலங்களில் நடக்கின்ற பயிற்சிப்பட்டறையில் எமது கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்வதோடு அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கடந்த பயிற்சிப்பட்டறை சம்பந்தமாக பேசுகின்றார்கள். சென்ற வியாழக்கிழமை நடைபெற்ற பயிற்சிப் பட்டறைக்கு காலையில் கூறினால் எங்களால் செல்ல முடியாது. ஏனென்றால் நாங்கள் வேறு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோம். எனவே இவ்வாறான பயிற்சிப் பட்டறை நடாத்துபவர்களுக்கு எங்களது தவிசாளர் அல்லது செயலாளர் தெளிவான முறையில் கால அவகாசம் கோட்டு முன்கூட்டி அறிவித்தல்களை வழங்குமாறு கூற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்காகத்தான் நான் கூறவில்லை. இந்தப் புத்தங்கள் வந்து 08 மதமாகின்றது. நான் கொளரவ ஆளுனரிடமும் தெரிவு செய்யப்பட்ட நாளில் இருந்து கூறுகின்றேன். கரையோரப் பகுதியில் இருக்கின்ற தவிசாளர்களுக்காவது முதல் இந்தப் பயிற்சிப் பட்டறையை நடாத்துங்கள் என்றும், புதிய உறுப்பினர்கள் வந்துள்ளார்கள் அவர்களுக்கும் இது பற்றிய அறிவு குறைவாக உள்ளது என்று கூறியும் அவர்களுக்கு அது பற்றிய கரிசனை இல்லை. சிங்களப் பகுதிகளில் நடைபெற்று விட்டது. நமது பகுதியில் மாத்திரம்தான் நடாத்த வில்லை. நான் புதிதாக நியமிக்கப்பட்ட உள்ளுராட்சி ஆணையாளரிடம் கூறினேன் நீங்களாவது அந்தப் புத்தகங்களை உறுப்பினர்களிடம் கொடுத்து விடுங்கள் என்றதற்கமைவாக அவசரமாக போடப்பட்ட பயிற்சிப் பட்டறையாகத்தான் இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தப் புத்தகங்களை எமது செயலாளரிடம் கூறியாவது பெற்றுத்தருமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அந்தப் பொறுப்பை எடுத்து பெற்றுத் தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த மாதம் தங்களிடம் புகைப்படத்துடனான கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அதன் பிரதியும் தங்களிடம் நான் தந்தேன். கல்லரிச்சல் ஏரியாவில் வடிகான் ஒன்று மன்னுக்குள் புதைந்து இருக்கின்றது. மழைகாலங்களில் நீர் ஓடுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. அதனையும், மபாஸா பள்ளிக்கு முன்னால் கான் ஒன்று புதிதாக போடப்பட்டது. தற்போது அது உடைந்துள்ளது அதனையும் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மபாஸா பள்ளி ஏரியாவைப் பார்த்தால் கானுக்குக் கீழ் ஆகக் குறைந்தது 06 அடியாவது வந்தால்தான் அதிகமான நீரை எடுக்கும். இல்லாவிட்டால் மழை காலத்தில் கானுக்கு மேலால் நீர் பரவக்கூரிய சந்தப்பம் ஏற்படும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கான் தேவையில்லாத பக்கத்தில் கான் உள்ளது. ஆனால் பள்ளம் உள்ள பகுதிகளில்தான் கான் தேவை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்காகத்தான் நான் சென்று பார்ப்பது. நாம் அவைகளை பார்த்து செய்ய வேண்டியவைகளை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மின்சார சபையினால் புதிய கம்பங்கள் நடப்படுகின்றது. அவைகள் கானுக்குள் நடப்படுகின்றது. அதனால் மழை காலங்களில் நீர் வடிந்து ஓடுவதற்கு தடையாக உள்ளது. அதனையும் கவனத்தில் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயம் தொடர்பாக நான் பொறியியலாளரிடம் கதைக்க முடியாமல் உள்ளது. ஏனென்றால் றிசவேசன் நிலத்திற்குள் வீட்டைக் கட்டினால் தூனை வீதியில் போட முடியாது. கானின் நடுவிலும் வைக்க முடியாது. அதனால்தான் கானின் ஓரத்தில் போடுகின்றார்கள். இதனை மக்கள்தான் உணர வேண்டும். தாங்கள் செய்வது பிழை என்பதை மக்கள் உணர்வதில்லை. மின்சாரம், டெலிகொம் காரர்களுக்கு றிசவேசன் இல்லை. அதிகமானவர்கள் கானில் வைத்து சுவரைக் கட்டினால் தூனை எங்கு நிறுத்துவது என்று கேட்கின்றனர். எனவே இதனை மக்கள் நன்கு உணர வேண்டும் என்பதோடு இந்த சபையின் நடவடிக்கைகள் இனிதே முடிகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.